பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ தொடக்கம்: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 20] சென்னை: ஆடி 16 (31—7—72) திங்கள் வெளியூர்: ஆடி 17 (1—8—72) செவ்வாய் [இதழ்: 40

சென்னை பல்கலைக்கழகத் துணைவேந்தர்

நெ. து. சுந்தரவடிவேலு மீண்டும் நியமனம்

சென்னை, ஜூலை 31—

சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தராக திரு. நெ. சுந்தரவடிவேலு அவர்கள் மீண்டும் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

அவருடைய பதவிக் காலம் இன்றுடன் முடிவடைகிறது.

ஆகஸ்டு 1-ந் தேதி முதல் மேலும் மூன்றாண்டுகளுக்கு அவர் அப்பதவியை வகிப்பார்.

குமாரமங்கலத்தின் விஷமத்தனம்

கூடல்மாநகரில் கழக மாநாடு

இலட்சோபலட்சம் மக்கள் அணிவகுக்கும் ஊர்வலம்

விழாக்கோலம் பூணுகிறது பாண்டியன் தலைநகர்

மதுரை, ஜூலை 31—

ஆகஸ்டு 4, 5, 6 ஆகிய நாட்களில் மதுரையில் நடைபெறவிருக்கும் மதுரை மாவட்ட தி. மு. க. மாநாட்டுக்கான ஏற்பாடுகள் இரவு--பகலாக நடைபெற்று வருகின்றன.

இலட்சோபலட்சம் பேர் மாநாட்டிலும் ஊர்வலத்திலும் பங்கேற்பதையொட்டித் தேவையான வசதிகளெல்லாம் செய்யப்பட்டு வருகின்றன.

மதுரை மாநகரம் முழுவதும் அலங்கரிக்கப்பட்டு விழாக்கோலம் பூண்டுவருகிறது.

மதுரை மேயரும் மாவட்டச் செயலாளருமான திரு. எஸ். முத்து எம்.எல்.சி. அவர்கள் முன்னின்று எல்லா ஏற்பாடுகளையும் செய்துவருகிறார்.

மதுரை மாவட்ட தி. மு. கழக ஐந்தாவது மாநாடு ஆகஸ்டு 4, 5, 6-ம் நாட்களில் நடைபெறவிருக்கிறது.

மதுரைப் மந்தயத் திடலில் ஐந்து இலட்சம் பேர் ஒரே சமயத்தில் அமர்ந்து மாநாட்டு நிகழ்ச்சிகளைக் காணும் வகையில் மாபெரும் பந்தல் போடப்பட்டுள்ளது.

பந்தலுக்குள் குடிநீர் வசதி செய்யப்பட்டுள்ளது; கழகத் தொழிற்சங்கத் தோழர்கள் நீர்மோர் வழங்க முன்வந்திருக்கின்றனர்.

ஊர்வலச் சிறப்பு

ஆகஸ்டு 4-ந் தேதி பிற்பகல் 3-மணிக்கு மாரியம்மன் தெப்பக்குளத்திலிருந்து மாபெரும் ஊர்வலம் புறப்படும்; முக்கிய வீதிகள் வழியாக மாநாட்டுப் பந்தலை அடையும்.

ஊர்வலம், 'பிள்ளையோ பிள்ளை' புகழ் மு.க. முத்து தலைமையில் நடைபெறும்.

ஊர்வலத்தில் கழக அரசின் சாதனைகளை விளக்கும் காட்சி வண்டிகள் - லாரிகள் அணிவகுத்து வரும்; சுற்றுப்புறக் கிராமங்களிலிருந்து ஏராளமான மாட்டு வண்டிகளும் ஊர்வலத்தில் வரவிருக்கின்றன.

வரவேற்பு வளைவுகள்

ஊர்வலம் செல்லும் வழியெங்கும் வரவேற்பு வளைவுகளை அமைத்திருக்கின்றனர்.

இவைகளில் மிகச் சிறந்த வளைவுக்கு மாநாட்டு மேடையில் வெள்ளிக் கோப்பை பரிசளிக்கப்படும்.

பத்தாயிரம் தொண்டர்கள் இருவண்ணச் சீருடை அணிந்து ஊர்வலத்தில் அணிவகுத்து வருவர்.

5-8-72 அன்று முரசொலி மாறன் எம்.பி. தலைமையில் மாநாடு துவங்கும்.

தி. மா. மு. க. அமைப்பாளர் எல். கணேசன் எம்.எல்.ஏ. மாநாட்டைத் துவக்கிவைக்கிறார்.

அறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவப் படத்தை பார்வர்டு பிளாக் கட்சித் தலைவர் மூக்கையா தேவர் எம்.பி திறந்து வைக்கிறார்.

கழகத் தலைவர் கலைஞர்--பொதுச் செயலாளர் நாவலர் - பொருளாளர் எம். ஜி. ஆர். மற்றும் அமைச்சர்கள், நாடாளுமன்ற - சட்டமன்ற உறுப்பினர்கள், கழக முன்னணியினர் கலந்து கொண்டு கருத்துரையாற்றுவர்.

நாடகங்கள்

சனிக்கிழமை இரவு சிவகங்கை சேதுராசன் நடிக்கும் 'உன்னைத்தான் தம்பீ' -- மறுநாள் (ஞாயிறு) இரவு முரசொலி அடியார் முஜிபுர் ரகிமானாக நடிக்கும் 'தங்க வங்கம்' ஆகிய நாடகங்கள் நடைபெறும்.

புதுமையான வரவேற்பு வளைவு

மேலமாசி வீதியில் அமைக்கப்படும் புதுமையான வரவேற்பு வளைவை நூற்றுக்கணக்கான மக்கள் கூடி வேடிக்கை பார்த்து வருகிறார்கள்.

இந்த வளைவின்மீது 60 அடி உயரத்தில் உலக உருண்டை வடிவில் ஒரு 'கோளம்' அமைக்கப்பட்டிருக்கிறது; இதில் தமிழகம் வரையப்படுகின்ற இடத்தில் அறிஞர் அண்ணா -- முதல்

(4-ம் பக்கம் பார்க்க)

கேரளக் கல்லூரிகள் நெருக்கடி பிரச்சினை

சமரசப் பேச்சுவார்த்தை தோல்வியடைந்தது

திருவனந்தபுரம், ஜூலை 34—

கேரளக் கல்லூரிகள் நெருக்கடி தொடர்பான பேச்சுவார்த்தைகள் தோல்வியடைந்ததாக அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

கடந்த மூன்று நாட்களாகப் பேச்சுவார்த்தை நடைபெற்றது; சில கட்டங்களில் உடன்பாடு ஏற்படும் என்ற நம்பிக்கை ஏற்பட்டது; எனினும் முடிவில் பேச்சுவார்த்தை தோல்வியடைந்தது.

மீண்டும் ஒருமுறை முயற்சி செய்து பார்ப்பது என்று அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது; இன்று மாலை மற்றொரு சுற்றுப் பேச்சுவார்த்தை நடத்துமாறு நிர்வாகத்தினரை அது அழைத்திருக்கிறது.

புதுவையில் தீ விபத்து

முதல்வர் பார்வையிட்டார்

புதுச்சேரி, ஜூலை 31—

அரியாங்குப்பத்துக்கு அருகிலுள்ள அபிஷேகபாக்கம் பேட்டை கிராமத்தில் கடந்த வியாழக்கிழமையன்று ஏற்பட்ட தீ விபத்தில் 53 குடும்பங்கள் வீடுகளை இழந்தன.

முதலமைச்சர் பாரூக் அந்த கிராமத்துக்குச் சென்று பார்த்தார்.

பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அரசு ரூ. 5,300 உதவித் தொகை அளித்துள்ளது.

தமிழ்நாட்டில் அமைதியைக் குலைக்கும் பேச்சு

தலைமையமைச்சருக்கு இரா. செழியன் தந்தி

சென்னை, ஜூலை 31—

தமிழ்நாட்டில், அமைதியைக் குலைக்கும் வகையில் மத்திய அமைச்சர் மோகன் குமாரமங்கலம் பேசியிருப்பது குறித்து நாடாளுமன்ற தி.மு.க. தலைவர் திரு. இரா. செழியன் அவர்கள், தலைமையமைச்சருக்குத் தந்தி மூலம் புகார் அனுப்பியுள்ளார்.

திரு. செழியன் அனுப்பியுள்ள தந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:—

"தமிழகத்தில் ஜூலை 5-ந் தேதியன்று நடைபெற்ற போலீசுத் துப்பாக்கிப் பிரயோகம் பற்றி நீதி விசாரணை நடத்த வேண்டும் என்று மத்திய உருக்கு அமைச்சர் மோகன் குமாரமங்கலம் கோரியுள்ளார்; அவரது இந்தச் செய்கையின் போக்குத் தாந்தன்மை கண்டு நான் அதிர்ச்சியுற்றேன்.

விவசாயிகள் நடவடிக்கைக் குழு முதலில் நீதி விசாரணை கோரியது; பிறகு அந்தக் கோரிக்கையை அந்த நடவடிக்கைக் குழுவே கைவிட்டது.

மாநில அரசுடன் சுமுகமான ஒப்பந்தம் ஒன்றை அந்த நடவடிக்கைக் குழு செய்து கொண்டது.

விவசாயிகள் நடவடிக்கைக் குழுவில் தமிழ்நாடு காங்கிரசுக் கமிட்டி (இந்திரா காங்கிரசு) செயலாளரும் ஒரு பிரதிநிதியாவார்; அரசுடன் ஒப்பந்தம் செய்துகொண்டுள்ளதில் அக்கட்சிக்கும் பங்கு உண்டு.

இந்த நிலையில் புதிய கோரிக்கை ஒன்றை மோகன் குமாரமங்கலம் விடுப்பது, மேற்கூறிய ஒப்பந்தத்திற்கு முரண்பட்ட செய்கையாகும் -- நடவடிக்கைக் குழுவில் அவரது கட்சி எடுத்த முடிவுக்கும் முரணானதாகும்.

இது, தமிழ்நாட்டில் நிலவிவரும் அமைதிச் சூழ்நிலையைக் குலைக்கும் விஷமத்தனத்தின் வாடையை வெளிப்படுத்துகிறது."

'அரசுப் பணிமனைகளில் ஆண்டவன் வழிபாடு கூடாது'

'இந்த வழக்கம் கைவிடப்படவில்லையானால் சட்டம் இயற்ற நேரிடும்'

கருநாடகச் சட்டமன்றத்தில் உள்ளாட்சி அமைச்சர் கடும் எச்சரிக்கை

பெங்களூர், ஜூலை 31—

'மைசூர் மாநிலத்திலுள்ள அரசு அலுவலகங்களிலும் - தனியார் நிறுவனங்களிலும் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையன்றும் கடவுள் வழிபாடு (பூஜை) செய்து பிரசாதம்' வழங்குவது வழக்கமாக இருந்துவருகிறது.

"அரசு அலுவலகங்களில் இந்த வழக்கத்தைக் கைவிட்டு விட வேண்டும்; இல்லையேல், இதைத் தடைசெய்ய அரசாங்கம் சட்டம் இயற்றும் நிலை ஏற்படும்"

என்று சட்டமன்றத்தில் உள்ளாட்சித்துறை அமைச்சர் பி. சேவலிங்கப்பா சுட்டிக்காட்டி எச்சரிக்கை விடுத்தார்.

"இப்படிப்பட்ட பூசைகள் நடத்துவது, பிற சமயங்களைச் சார்ந்தவர்களின் மனத்தைப் புண்படுத்துவதாகும்" என்று அமைச்சர் மேலும் கூறினார்.

"அரசாங்க அலுவலகங்களில் அரசு ஊழியர்கள் பூஜை செய்வதற்குப் பதில் அவரவர் இல்லங்களில் அவ்வாறு செய்து கொள்ளலாம்" என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

ஓட்டல்கள் போன்ற பொது இடங்களில் வைக்கப்படும் பெயர்ப் பலகைகளில் சாதிப் பெயர்களை வைப்பதற்குத் தடை விதிக்கக் கோரும் தனிநபர் தீர்மானத்தின் மீது பேசுகையிலேயே அமைச்சர் இவ்வாறு அறிவித்தார்.

சாதி ஒழிப்புத் தீர்மானம் தோல்வி

"உணவு விடுதிகள் -- வீதிகள் போன்ற பொது இடங்களில் சாதிப் பெயர் கூடாது"

என்ற தனிநபர் தீர்மானம் சட்டமன்றத்தில் கொண்டுவரப்பட்டது; ஆளுங் காங்கிரசாரால் அது தோற்கடிக்கப்பட்டது.

எதிர்க் கட்சித் தலைவர்களின் வற்புறுத்தலின்மீது, தீர்மானத்தை அவைத் தலைவர் வாக்கெடுப்புக்கு விட்டார்; முதலமைச்சர் மற்றும் இரு அமைச்சர்கள் உட்பட 43 இந்திரா காங்கிரசு உறுப்பினர்கள்

(4-ம் பக்கம் பார்க்க)

மத்திய அரசின் தெளிவற்ற நிலை

முரண்பட்ட முடிவுகளால் தொழில் வளர்ச்சி பாதிப்பு

குழப்பமான நிலையில் நாட்டின் பொருளாதாரம்

தமிழகத் தொழிலமைச்சர் மாதவன் வேதனை -- தெளிவான கொள்கை வகுக்க வேண்டுகோள்

சென்னை, ஜூலை 29—

"நாட்டின் இன்றையப் பொருளாதார நிலை மிகவும் குழம்பிப் போயிருப்பதற்குக் காரணம் திட்டவட்டமான – நிலையான ஒரு கொள்கை மத்திய அரசுக்கு இல்லாமற் போனதுதான் !

"மத்திய அரசு எடுக்கும் பல முடிவுகளும் ஒன்றுக்கொன்று முரணானதாக அமைந்துவிடுகின்றன ; இம் முடிவுகள் எல்லாவிதமான பிரச்சினைகளையும் உருவாக்குகின்றன !

"தனது கொள்கை என்ன என்பதைத் தெளிவாக மத்திய அரசு அறிவித்துவிட்டு, அதனை அச்சமின்றிச் செயல்படுத்த முன்வர வேண்டும் ; அந்தக் கொள்கை எப்படிப்பட்டதாக வேண்டுமானாலும் இருக்கட்டும் ; அது கம்யூனிஸ்டுத் தத்துவங்களைச் சார்ந்ததாகவோ அல்லது தீவிர வலதுசாரித் தன்மையுடையதாகவோ இருந்தாலும் சரி – அதனை நாட்டுக்கு வெளிப்படையாக அறிவித்துவிட வேண்டும் ; நாட்டுப் பொருளாதாரக் கொள்கை என்ன என்பதை மக்கள் அறிந்துகொள்ள வேண்டும் என்பது முக்கியமாகும்"

என்று தொழில் அமைச்சர் செ. மாதவன் அவர்கள் ஆந்திர வர்த்தக சபையில் பேசுகையில் தெளிவுற விளக்கிக் கூறினார்.

"மத்திய அரசு தெளிவான – திட்டவட்டமான கொள்கை அறிக்கைகளை வெளியிடத் தவறுவதால், தொழில் அதிபர்கள் குழம்ப நேரிடுகிறது ; பணவீக்கத்தைத் தடுக்கவும் -- பொருளாதார வளமைக்கு உள்ளாக்கவும் சமூகத்திலுள்ள பல தரப்பட்ட பிரிவினரிடையில் ஒத்துழைப்பில்லாமல் போய்விடுகிறது" என்றும் அவர் குறிப்பிட்டார்.

"இப்போதைய தொழில் வளர்ச்சிக் குறைவுக்கும் – விலையேற்றத்திற்கும் மத்திய அரசின் நிச்சயமில்லாத கொள்கைகள், சுயநல அரசியல்வாதிகளும் -- கொள்ளை இலாப வணிகர்களும் உருவாவதற்கு வழிகோலுகிறது" என்றும் அவர் கருத்தறிவித்தார் ; தொடர்ந்து அவர் குறிப்பிட்டதாவது :—

விலைவாசி உயர்ந்து வருவதை அனைவரும் உணருகிறோம் ; ஆனால், இதற்கு என்ன பரிகாரம் என்றுதான் யாருக்கும் தெரியவில்லை.

நாங்கள் எதிர்க் கட்சியாக இருந்தபோதும் விலைவாசி உயர்ந்து கொண்டுதான் இருந்தன ; ஆளும் கட்சியான பிறகு இப்போதும் விலைவாசி உயர்ந்து கொண்டேயிருக்கிறது ; இதற்குப் பல காரணங்கள் இருக்கக் கூடும்.

உழவர்கள் வாங்கும் தொழில் பொருட்களின் விலை உயர, வேளாண்மைப் பொருட்களின் விலையும் உயரவே செய்யும்.

விலைவாசியை எதிர்த்துப் போராடும் கிளர்ச்சிக்காரர்கள், மறுபுறத்தில் விலைச் சரிவை எதிர்த்துப் போராடுவதையும் பார்த்து வருகிறோம் ; இது ஒரு விசித்திரமான சூழ்நிலையாகும்.

அடிக்கடி ஊதியங்களை உயர்த்துவது -- மக்களின் சமுதாய நல வாழ்க்கைக்குத் திட்டமிடுதல் -- வரிச் சுமை கூடிக்கொண்டே போவது ஆகிய அனைத்துமே விலைவாசி உயர்வுக்குக் காரணமாகும்.

இடைத்தரகர்களாக இருந்து செயல்படுவோரின் பங்கு விலைவாசி உயர்வுக்கு முக்கியக் காரணமாகும். ஆகவே, இந்த இடைத் தரகர்களை ஒழித்துக்கட்ட தொழில் -- வணிகத் துறையினர் ஒத்துழைப்புத் தர வேண்டும்.

மத்திய அரசாங்கம் அரசாங்கத் துறைத் தொழில்களுக்கு ஊக்கமளிக்க விரும்புகிறதா -- கூட்டு முதலீட்டுத் தொழில்முறையை ஊக்குவிக்க விரும்புகிறதா -- அல்லது கூட்டுறவு முறையை ஊக்குவிக்க விரும்புகிறதா -- இதெல்லாம் தெளிவாகத் தெரியவில்லை ; தனியார் துறை நீடிப்பை விரும்புகிறார்களா வென்பதும் தெளிவாகத் தெரியவில்லை ; தமிழ்நாடு அரசாங்கம், தெளிவாகக் கொள்கையைத் தெரிவிக்குமாறு பன்னிப் பன்னிக் கோரி வந்துள்ளது.

"எவரேனும் இங்கு கம்யூனிசத்தைக் கொண்டு வரவேண்டுமென்று விரும்பினால் அதை துணிந்து வெளியிட வேண்டும் ; நாடு எதேச்சாதிகார முறைகளைப் பின்பற்றுமென்று சொல்லட்டும் ; ஏகபோகத் தொழில்களை எடுத்துக்கொள்ளப் போவதாக இருந்தால், எல்லாக் கட்சிகளும் ஆதரிக்கும் ; ஆனால் எதுவும் தெளிவாகத் தெரியவில்லை.

"ரூ. 5 கோடிக்குமேல் முதலீடு தேவைப்படும் எல்லா நிறுவனங்களையும் அரசாங்கத் துறையில் எடுத்துக் கொள்வதென்று மத்திய அரசு முடிவு செய்யலாம். ஒரு கோடி ரூபாய் முதல் ரூ 5 கோடிவரை கூட்டு முதலீட்டுத் துறையில் வைத்துக் கொள்ளலாம். ரூ 25 இலட்சம் முதல் ஒரு கோடி ரூபாய்வரை கூட்டுறவுத் துறைக்கு ஒதுக்கலாம்.

விலைகளைக் குறைப்பதற்கான கூட்டு முயற்சி வேண்டும் ; கிராமங்களில் விளைபொருள்களுக்கு நல்ல விலை கோரும் அரசியல்வாதிகள், நகரங்களில் ஊதிய உயர்வுக்கான இயக்கம் நடத்துகிறார்கள்.

விளை பொருள்களின் விலையைக் குறைக்க கோருபவர்கள், சாகுபடிக்கான பொருள்களின் விலையைக் குறைக்கக் கோருவதில்லை.

"மாநிலங்களையும் -- தனியார் துறைகளையும் எவ்விதம் பாதிக்கும் என்பதைப்பற்றி விவாதிக்காமலே மத்திய அரசு தங்கள் ஊழியர்களின் ஊதியங்களை ஏற்றக் கூடாது. இதைப்பற்றி மத்திய அரசிடம் கேட்டோம் ; ஆனால் உறுதிமொழி கிடைக்கவில்லை ; மத்திய அரசாங்க ஊழியர்களின் ஊதியம் விரைவில் உயரக் கூடும். அதனால் மாநிலங்களுக்குப் பிரச்னைகள் தோன்றக் கூடும்.

தங்கள் வாக்காளர்களுக்காக அரசியல்வாதிகள் சமூக நல பணியின் வடிவத்தில் -- வளர்ச்சிச் சார்பில்லா திட்டங்களில் செலவிடக் கோருகிறார்கள் ; ஆனால், அதே அரசியல்வாதிகள் வரிகள் உயர்வை எதிர்க்கிறார்கள்."

அவசரப்பட்டு சட்டமியற்றமாட்டோம்

தப்பித்துக்கொள்ளச் சந்து பொந்து இல்லாமல் செய்வோம்

நகரச் சொத்து உச்சவரம்பு குறித்து அமைச்சர் செ. மாதவன்

வடநாட்டு மாநிலம் ஒன்றின் நிலையை எடுத்துக்காட்டி விளக்கம்

சென்னை, ஜூலை 30 —

நகரச் சொத்துக்கு உச்சவரம்பு கட்டுவதில் மாநில அரசு அவசரம் காட்டாது ; ஏனெனில், இப்படிப்பட்ட சட்டங்களை அவசரமாகச் செய்வதனால், அதிலிருந்து தப்பித்துக்கொள்வதற்கு பல வழி முறைகளும் ஏற்பட்டுவிடுகின்றன.

"பொருளாதார வளம் ஒரே இடத்தில் குவிந்துவிடாமல் இருக்க நகரச் சொத்துக்கு உச்சவரம்பு கட்டவேண்டும் என்பதில் தமிழக அரசு உறுதியாக இருக்கிறது ; ஆனால், அதனை தப்பித்துக் கொள்ள வழியில்லாதபடி எச்சரிக்கையாகச் செய்ய வேண்டுமென்று அரசு விரும்புகிறது"

என்று, தமிழகத் தொழிலமைச்சர் திரு. செ. மாதவன் அவர்கள் ஆந்திர வர்த்தகக் கழக ஆண்டு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் தெரிவித்தார்.

நகரச் சொத்து உச்சவரம்புச் சட்டம் எவ்வாறு மோசமான முறையில் தயாரிக்கப்படுகிறது என்பதற்கும் -- அதில் எவ்வாறு பல மோசடிகளுக்கு இடம் இருக்கிறது என்பதற்கும் அமைச்சர் மாதவன் அவர்கள் சான்று ஒன்று காட்டினார்.

வட இந்தியாவைச் சேர்ந்த ஒரு மாநில முதலமைச்சருடன் தாம் இதுபற்றிப் பேசிக்கொண்டிருந்ததாகவும், அந்த மாநிலம் தற்போது நகரச் சொத்து உச்சவரம்புச் சட்டத்தைத் தயார் செய்து கொண்டிருப்பதாகவும், அந்தச் சட்டத் தயாரிப்பில் பல மோசடிகள் இருக்கமாட்டா என்றும் அவர் சொன்னார்.

அவர் மேலும் கூறியதாவது :—

"தமது மாநிலத்தில் தனிப்பட்டவர் சொத்து உச்சவரம்பு ரூ. 5 லட்சம் ஆக இருக்கும் என்றும் தொழில் நிறுவனங்களுக்குச் சொந்தமாக உள்ள சொத்துக்களுக்கு விதிவிலக்கு அளிக்கப்படும் என்றும் அந்த முதலமைச்சர் கூறினார் ; ஆகவே, இதன் மூலம் நகரச் சொத்து ஒரு சிறிதளவுதான் குறையும் ; அரசாங்கத்துக்குத் தேவையானால், காலி நிலத்தையும் ரூ. 5 லட்சத்துக்கு மேற்பட்ட பெரிய சொத்துக்களையும், எடுத்துக் கொள்ளலாம் என்று இந்த உத்தேசச் சட்டம் கூறுகிறது ; இப்படிப்பட்ட ஒரு விதி அவசியம் இல்லை ; நில ஆர்ஜிதச் சட்டத்தின் கீழேயே இதை அரசு எடுத்துக் கொள்ளலாம் ; ரூ. 5 லட்சத்துக்கு மேற்பட்ட கட்டடங்கள் விஷயத்தில் அவைகளைப் பிரிவினை செய்யவேண்டும் என்று சட்டம் கூறுது என்றும், அவைகளுக்கு அரசு வரி விதிக்கும் என்றும் அந்த முதலமைச்சர் கூறினார்.

'அவைகளின் சொந்தக்காரர்கள் எவ்வாறு வரி கட்ட முடியும் ?' என்று கேட்டபோது, 'கட்டடத்தையோ--சொத்தையோ அவர்கள் விற்றுவிடுவார்கள்' என்று அந்த முதலமைச்சர் கூறினார்.

அந்தச் சொத்தை யார் வாங்குவார்கள் என்பது பற்றி அவர் ஒன்றும் சொல்லவில்லை.

பொருளாதாரக்குவியல் அகற்றப்பட வேண்டும் என்பதை நான் ஆதரிக்கிறேன் ; ஆனால் பொத்தல்களுடன் சட்டம் இயற்றிப் பயனில்லை ; அது ஓட்டு வாங்கும் தந்திரமாகவே முடியும் ; 'சட்டம் படித்தவன்' என்ற முறையில் 'அவைகளால் பயன் ஏதும் ஏற்படாது' என்று நான் உறுதியாகக் கூறமுடியும்."

தொழிலாளர் பிரச்சினை

தொழில் தகராறுகள் குறித்து அமைச்சர் செ. மாதவன் அவர்கள் கூறியதாவது :—

"தொழிலாளர்களிடையே அண்மையில் அமைதியின்மை நிலவுவதற்குத் தொழிற் சங்கத்தில் அரசியல் கட்சிகளின் தலையீடே காரணமாகும்.

'ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம்' என்ற கொள்கையும், அரசியல் கட்சிகளின் தலையீடு இல்லாமல் இருப்பதும் தொழில் அமைதியை ஏற்படுத்தும்.

தொழிலாளர் நலன் பேணுவதையே அரசு தனது கொள்கையாகக் கொண்டிருக்கிறது.

இரு அரசுகளும் இணைந்து செயல்படுவது அவசியம்

தொழிலுக்கு மூலப் பொருட்களை ஒதுக்கும் சிக்கலான பிரச்சினையில் மத்திய அரசு மாநில அரசை நம்ப வேண்டும் ; இரு அரசுகளுமே இணைந்து செயல்பட்டுத் தேவையைக் கணக்கிட வேண்டும் ; இங்கும் இடைத் தரகர்கள் அகற்றப்படவேண்டும்."

தியாகிகளுக்கு உதவிப் பணம்

அமைச்சர் கே.சி. பந்த் அறிவிப்பு

புதுடில்லி, ஜூலை 29—

சுதந்திரப் போராட்டத்தில் 6 மாதம் அல்லது அதற்குமேல் சிறைத் தண்டனை அனுபவித்துள்ள தியாகிகளுக்கு இந்த ஆண்டு ஆகஸ்டு 15-ஆம் தேதி முதல் உதவிப்பணம் வழங்குவது என்று மத்திய அரசு முடிவு செய்திருக்கிறது.

அவர்கள் உயிருடன் இராவிட்டால் அவர்களுடைய குடும்பத்தினருக்கு இந்தப் பணவுதவி வழங்கப்படும்.

குடும்பம் என்பது -- மறுமணம் செய்து கொள்ளாத அவருடைய மனைவி அல்லது தகப்பனாரைக் குறிக்கும்.

மத்திய அரசாங்க உள்துறை துணையமைச்சர் கே.சி. பந்த் இங்கு இதை அறிவித்தார் ; இத் தொடர்பில் மேலும் அவர் தெரிவித்ததாவது :—

"தியாகிகளுக்குக் குறைந்தபட்ச உதவிப் பணம் மாதம் ரூ 200 -- தியாகி உயிருடன் இராவிட்டால் அவர் மனைவிக்கு ரூ 100 மாதம் தரப்படும்.

மற்றும், திருமணம் ஆகாத மகள் அல்லது மைனர் மகன் ஆகிய ஒவ்வொருவருக்கும் ரூ 50 மாதம் தரப்படும் ; ஆனால், இந்த மொத்தத் தொகை ரூ. 200-க்கு மேல் அளிக்கப்படமாட்டாது.

இதுவரை உதவிப் பணம் கேட்டு 50,000-க்கு மேற்பட்ட மனுக்கள் வந்திருக்கின்றன ; இவை தற்போது பரிசிலனை செய்யப்பட்டு வருகின்றன. உதவிப் பணம் மத்திய அரசே நேரடியாக அளிக்கும்."

மனுதாரர்களின் ஐயப்பாடுகளை அகற்றுவதற்காகச் சில விளக்கங்களை அவர் அளித்தார் :—

"சிறை அதிகாரிகளிடம் இருந்து சிறைவாசம் பற்றிய சான்று சம்பந்தப்பட்ட தியாகிக்குக் கிடைக்காவிட்டால், சிறைவாச காலம் பற்றிய அவருடைய பிரமாண வாக்கு மூலமும் அதனுடன் தற்போதைய எம்.பி. அல்லது முன்னாள் எம்.பி.-யின் சான்றும் அளிக்கப்பட்டால் அது ஏற்றுக் கொள்ளப்படும்."

வட்டிக்கடைக்காரர் தொல்லையிலிருந்து ஏழைகள் மீள வழிவகுப்பீர் !

சென்னை, ஜூலை 26—

"இரஷ்யா -- இத்தாலி -- பிரான்சு போன்ற நாடுகளில் சோஷலிச நடவடிக்கைகள் ஏராளமாக எடுக்கப்பட்டு வெற்றி நடைபோட்டு வருகின்றன. இரஷ்யாவைப் பொறுத்த வரையில் இரத்தப் புரட்சிக்குப் பிறகுதான் எல்லாமே சோஷலிசமயமாக்கப்பட்டிருக்கின்றன ; இந்த நடவடிக்கைகளை ஒப்பிட்டால், இந்தியாவில் பாங்கிகள் நாட்டுடைமையாக்கப்பட்டது புரட்சிகரமான நடவடிக்கை என்று கூறிவிட முடியாது ; இருந்தாலும், தலைமையமைச்சரான ஒரு பெண்மணி -- இந்த துணிச்சல் மிக்க நடவடிக்கையை ஒரு மணி நேரத்தில் எடுத்ததைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

"இந்தியாவில் ரூ. 6,000 கோடிக்குக் 'கறுப்புப் பணம்' இருப்பதாக -- அது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கருத்துத் தெரிகின்றனர் ; அந்தக் கறுப்புப் பணத்தைக் கண்டுபிடித்துக் கொடுத்தால் நாட்டுக்கு நற்பயன் ஏற்படும்.

"பாங்கிகள் நாட்டுடைமையாக்கப்பட்டதால் கோளாறுகள் ஏற்பட்டுவிட்டது என்று யாராவது கூறுவார்களேயானால், அதற்குக் காரணம் சனநாயகத்தில் ஏற்பட்ட குறைகளே தவிர, நாட்டுடைமையாக்கப்பட்டதால் ஏற்பட்ட குறையாக அதனைக் கருதிவிட முடியாது.

"பாங்கிகள் நாட்டுடைமையான பிறகு ஏழை எளியவர்கள் வாழ்வில் சிறிதளவு நிறைவு ஏற்பட்டதாகத் தெரிகிறது ; ஈட்டிக்காரர் -- மார்வாடிக்காரர்களின் தொல்லையிலிருந்து ஏழை மக்கள் தப்பித்தனர் ; இப்போது இப்படிப்பட்ட ஏழைகளுக்கு நாட்டுடைமையாக்கப்பட்ட பாங்கிகளில் உதவி தரப்படுகிறது.

"இந்த விழாவின் மூலம், நாட்டுடைமையாக்கப்பட்ட பாங்கிகளின் நிர்வாகிகளையும் -- சம்பந்தப்பட்ட அதிகாரிகளையும் கேட்டுக் கொள்வதெல்லாம், 'இதுபோன்ற பாங்கிகளில் ஏழை எளிய மக்களுக்கு உதவி செய்யுங்கள்' என்பதுதான்.

"ஒன்றிரண்டு தவறுகளை சமுதாயத்தில் யாரோ சிலர் செய்வதனால் அதன் பலனை மற்றவர்கள் அனுபவிக்க முடியாமல் போய்விடுகிறது.

"நாட்டுடைமையாக்கப்பட்ட பாங்கிகளில் சாமானியர்களும் உதவி பெற வழிவகைக் காணுங்கள் -- 'வங்கிகளுக்கு வரவேண்டும்' என்ற பழக்கத்தை ஏற்படுத்துங்கள் ; சாமானியர்களுக்குப் பாங்கிகளில் கொடுக்கல் -- வாங்கல் செய்தால்தான் பாங்கிகள் நாட்டுடைமையாக்கப்பட்டதற்கு அர்த்தமாகும் -- அது வெற்றி பெற்றதாகக் கருதப்படும்."

--ம. பொ. சிவஞானம்

(பாங்கிகள் ஆண்டு விழாவில்)

தமிழ்நாட்டில் 'நிரோத்' தயாரிப்புத் தொழிற்சாலை

நாகர்கோவில், ஜூலை 29—

கருத்தடை சாதனமான 'நிரோத்' தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்று தமிழ்நாட்டில் அமைக்கப்பட்டிருக்கிறது.

கருத் தரிப்பதைத் தடுப்பதற்கு ஆண்கள் பயன்படுத்தக்கூடிய எளிய சாதனம் 'நிரோத்'.

ரப்பரினால் ஆன இந்தக் கருத்தடைச்சாதனத்தை 'இந்துஸ்தான் லாடெக்ஸ்' என்ற நிறுவனம் தயாரித்து வருகிறது.

அரசு ஆதரவுடன் 15 காசுக்கு 3 வீதம் விற்கப்பட்டுவரும் 'நிரோத்' தின் உற்பத்தியைப் பெருக்க இரண்டாவது தொழிற்சாலை ஒன்றைத் தமிழ்நாட்டில் அமைக்கத் திட்டமிட்டிருக்கிறது.

குமரி மாவட்டத்தில் இதற்காக 3 இடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கின்றன.

இந்தத் தொழிற்சாலையில் உற்பத்தி தொடங்கியதும், ஆண்டுக்கு ஏறத்தாழ $14\frac{1}{2}$ கோடி 'நிரோத்' தயாராகும் என் எதிர்பார்க்கப்படுகிறது

சென்னை நகர் வரையில் அயல்நாட்டு விமானங்கள்

நேரடிப் போக்குவரத்து ஏற்படுத்த வற்புறுத்தல்

தமிழகச் சுற்றுலா வளர்ச்சிக்கு மேலும் திட்டங்கள்-- அமைச்சர் க. இராசாராம் விளக்கம்

சென்னை, ஜூலை 27—

"அந்நிய நாடுகளின் விமானப் போக்குவரத்து நிறுவனங்கள், சென்னைக்கு நேராக விமானப் போக்குவரத்து நடத்துவதற்கு மத்திய அரசு அனுமதிக்க வேண்டும்.

'அந்நிய -- உள்நாட்டுச் சுற்றுலாப் பயணிகள் வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களையும் -- இயற்கை வனப்புமிக்க இடங்களையும் கண்டு களிப்பதற்கு வசதியாக அந்நிய நாடுகளின் விமானங்கள் நேராகச் சென்னைக்கு வரவேண்டும்"

என்று, தமிழ்நாடு சுற்றுலாத் துறை அமைச்சர் க. இராசாராம் அவர்கள் வலியுறுத்திக் கூறினார்.

சென்னைச் சுழற்குழு (ரோட்டரி கிளப்) ஆதரவில் நடைபெற்ற கூட்டத்தில் அவர் பேசுகையில், சுற்றுலாப் பயணிகளைக் கவருவதற்குத் தமிழக அரசு கொண்டு வந்துள்ள திட்டங்களை விவரித்துக் கூறுகையில் குறிப்பிட்டதாவது :—

தீவுத் திடலைச் சுற்றிலும் பூங்காக்கள் அமையும்

'தீவுத் திடலைச் சுற்றிலும் நல்ல பூங்காக்களை அமைப்பது ; இந்தப் பூங்காக்கள், சுற்றுலாப் பயணிகள் சிறிது நேரம் தங்கி ஓய்வு பெறும் அளவில் அமைந்திருக்கும்.

மெரினா -- எலியட்ஸ் கடற்கரைகள் எழிலூட்டப்படும்

"மெரினா கடற்கரையையும் -- அடையாற்றிலுள்ள எலியட்ஸ் கடற்கரையையும் அழகுபடுத்தும் திட்டம் ஒன்றும் செயல்படுத்தப்படும்.

மாமல்லபுரத்தில் சுற்றுலா விடுதிகள்

"சுற்றுலாப் பயணிகட்குச் செய்யப்படும் வசதிகளில் முக்கியமான திட்டமாக மாமல்லபுரத்தில் கட்டப்படவிருக்கும் சுற்றுலா விடுதியைக் குறிப்பிடலாம் ; இந்த விடுதியில் 100 அறைகள் இருக்கும் ; இதைக் கட்டுவதற்கு ரூ. 38 இலட்சம் செலவாகும் என மதிப்பிடப்பட்டிருக்கிறது."

தங்களது கோரிக்கைகள் ஆக. 15-ந் தேதிக்குள் ஏற்கப்படாவிட்டால் ஒத்துழையாமை இயக்கம் நடத்தவதென இந்திய விமான எஞ்சினியர்கள் முடிவு செய்தனர்.

கலைஞரின் கண்ணொளி வழங்கும் திட்டம்

மனிதாபிமான அறப்பணிக்குத் தமிழக முதல்வரின் சீரிய உதாரணம்

அமெரிக்க மருத்துவத்துறை நிபுணர்களின் நெஞ்சார்ந்த பாராட்டு

சென்னை, ஜூலை 31—

உலகப் புகழ்பெற்ற கண் மருத்துவர்களும் – பார்வையற்றவர்களுக்குப் பார்வை வழங்கும் பணியில் ஈடுபட்டுள்ள கழகத்தினரும்— தமிழ்நாட்டில் முதலமைச்சர் கலைஞர் அவர்களின் பெயரால் மேற்கொள்ளப்பட்டுள்ள இலவசக் கண் சிகிச்சை முகாமைப் பேரார்வத்துடன் வரவேற்று வாழ்த்துரை வழங்கியுள்ளனர்.

சிகாகோவிலிருந்து :

சிகாகோ நகரில் உள்ள இல்லினியாஸ் பல்கலைக்கழகக் கண் மருத்துவத்துறைத் தலைவர் டாக்டர் மார்ட்டன் எம். கோல்டு பெர்க் என்பவர் வழங்கியுள்ள பாராட்டுரை வருமாறு :—

"கண் சிகிச்சை நிதி திரட்டுவதில் தமிழ்நாடு முதலமைச்சருக்குக் கிடைத்த வெற்றிக்கு என் பாராட்டுக்கள்.

"இந்நிதி ஏற்பாடு, மிக முக்கியமான -- பயனுள்ள முன்னேற்றப் பணியாகும்.

"தென்னிந்தியாவில் கண் புரையிலிருந்து ஏற்படும் பார்வை இழப்பை இது நிச்சயமாக நீக்கிவிடும் என்பதை நான் அறிவேன்.

"இப்பயனுள்ள திட்டத்தில் பங்கு கொண்டு பணியாற்றும் மருத்துவத் துறையினரையும் -- அரசினரையும் பாராட்ட விரும்புகிறேன்.

நீங்கள் ஓர் சிறப்புமிக்க -- மனிதாபிமானமிக்க பணியை ஆற்றி வருகிறீர்கள்."

பால்டிமோரிலிருந்து :

மேரிலாந்தில் பால்டிமோர் என்ற இடத்திலுள்ள ஜான் ஹாப்கின்ஸ் மருத்துவமனையைச் சார்ந்த வில்மெர் நிறுவனத்தின் இயக்குநரும் இத்திட்டத்தைப் பாராட்டிக் கூறியுள்ளார்.

இங்கிலாந்திலிருந்து :

இங்கிலாந்தில் சசெக்ஸ் என்ற இடத்தில் உள்ள பார்வையற்றவர்களுக்குப் பணிபுரியும் ராயல் காமன்வெல்த் சங்கத்தின் இயக்குநர் ஜான் பி வில்சன் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார் :—

"உங்கள் மாநிலத்தில் பார்வையற்றோர் நலனில் பேரார்வம் காட்டிப் பணியாற்றி வருவதால் இப்பணியில் ஈடுபட்டுள்ள ஒவ்வொருவருக்கும் எங்கள் பாராட்டுதல்களைத் தயவுசெய்து தெரிவிக்கவும்.

பார்வை இழப்பைச் சிகிச்சையின் மூலம் குணமாக்கிவிட முடியும் ; இதில் போதிய கவனம் செலுத்தித் தேவையான நிதியுதவி அளிப்பது மனிதாபிமானத்துடன் பணியாற்றும் அரசின் கடமையாகும்

இவ்வரிய பணியில் உங்கள் முதலமைச்சர் எடுத்துள்ள முயற்சி, உலகத்தின் மற்ற பகுதிகளிலுள்ளவர்களையும் தூண்டக் கூடும் என்று நம்புகிறோம்."

ஹோனலூலுவிலிருந்து :

ஹோனலூலு என்ற இடத்தில் உள்ள பார்வை இழப்பைத் தடுக்கும் அனைத்து நாட்டுக் கழகத்தின் செயலாளர் டாக்டர் வில்லியம் ஜான் ஹோம்ஸ் அவர்கள் குறிப்பிட்டுள்ளதாவது :—

"நல்ல கண் பார்வை ஏற்படச் செய்வதும், மனிதரில் ஒருவரைப் பற்றி ஒருவர் அக்கறை கொள்ளச் செய்வதும்தான் நமது குறிக்கோள்."

பாஸ்டனிலிருந்து :

பாஸ்டன் நகரில் உள்ள 'ரெட்டினா' அறக்கட்டளை நிறுவனத்தின் தலைவர் டாக்டர் சார்லஸ் ஸ்கீபன்ஸ் கூறியிருப்பதாவது :—

"முதலமைச்சர் கண் சிகிச்சை நிதி ஏற்படுத்தியதற்கு உளமார்ந்த வாழ்த்துக்கள்.

இந்நிதி ஏற்படுத்தியது, இந்தியாவில் கண் பாதுகாப்பில் ஒரு புதிய சகாப்தத்தை ஏற்படுத்தியுள்ளது."

மேற்கண்ட பாராட்டுதல்கள், மதுரை மருத்துவக் கல்லூரியின் துணை முதல்வராகவும் -- மதுரை எர்ஸ்கின் மருத்துவமனையில் கண் சிகிச்சை மருத்துவராகவும் பணியாற்றும் டாக்டர் ஜி. வெங்கடசாமி அவர்களுக்கு வந்துள்ள வாழ்த்துச் செய்திகளில் அடங்கியுள்ளன.

இப்பாராட்டுதல்கள், தமிழ்நாட்டின் தலைமைக்குக் கிடைத்த காணிக்கையாகவும் விளங்குகின்றன.

வேளாண்மைத் துறை அமைச்சர்

மன்னை நாராயணசாமி

நிகழ்ச்சிகள்

ஆக. 1: தஞ்சாவூர் இணை இயக்குநர் ஏற்பாடு செய்துள்ள நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளல்.

ஆக. 2: கும்பகோணம்.

ஆக. 3: தஞ்சாவூர்-- மருத்துவக் கல்லூரி கண்காட்சித் திறப்பு விழாவில் கலந்துகொள்ளுதல்.

ஆக. 4, 5, 6: மதுரை மாநாடு.

★★

மதுரை மாவட்ட

தி. மு. கழக 5-வது மாநாடு

1972 ஆகஸ்டு 5, 6 (சனி -- ஞாயிறு) ஆகிய நாட்களில்

மதுரை பந்தயத் திடலில்-- வி. எஸ். எஸ். மணி பந்தலில் --- நடிப்பிசைப் புலவர் கே. ஆர். ஆர். அரங்கத்தில் நடைபெறும்.

தலைவர் :	திறப்பாளர் :	அண்ணா படத் திறப்பாளர் :
முரசொலி மாறன் எம்.பி.	எஸ். கணேசன் எம்.எல்.ஏ.	பி. கே. மூக்கையா தேவர் எம்.பி.

கழகத் தலைவர் — பொதுச்செயலாளர் — பொருளாளர்--புரட்சிநடிகர்

டாக்டர் கலைஞர் -- டாக்டர் நாவலர் -- எம். ஜி. ஆர்.

மற்றும் அமைச்சர்கள் -- நாடாளுமன்ற -- சட்டமன்ற -- உள்ளாட்சிமன்ற உறுப்பினர்கள் -- கழக முன்னணியினர் கலந்துகொள்வர்

ஆக. 5-ம் நாள் இரவு 10-மணிக்கு	ஆக. 6-ம் நாள் இரவு 10-மணிக்கு
டாக்டர் கலைஞர் எழுதிய சிவகங்கை சேதுராசன், இராமாராவ் நடிக்கும் 'உன்னைத்தான் தம்பீ' (கழகப் பிரச்சார நாடகம்)	முரசொலி அடியார் முஜிபுர் ரகிமானாக நடிக்கும் 'தங்க வங்கம்' (மாநில சுயாட்சிக் குரல் எழுப்பிய வங்காளத் தலைவரின் வரலாற்று நாடகம்)

இரு நாட்களுக்கும் சேர்த்துக் கட்டணம் : ரூ. 10 ; 5 ; 2. --- --- பெண்களுக்கு ரூ. 1.

4--8--72 அன்று மாபெரும் ஊர்வலம் நடைபெறும்.

வரவேற்புக் குழுத் தலைவர் :	செயலாளர்கள் :	பொருளாளர் :	தொண்டர் படைத் தலைவர்கள் :
எஸ். முத்து எம்.எல்.சி.	பி. எஸ். மணியன் எம்.எல்.ஏ., கு. திருப்பதி எம்.எல்.ஏ. காவேரி மணியம் எம்.எல்.ஏ.	வெங்கிடசாமி	பொன். முத்துலிங்கம், மு. காதர்சா திருமதி தேவகி பாண்டியன் எம்.சி. ஏ. வி. இராசு, பொ. இராமச்சந்திரன்

★★

குமாரமங்கலங்களுக்குக் காணிக்கை :

இந்திரா கட்சி ஆட்சியினர் அணுகுமுறைக்கு ஓர் எடுத்துக்காட்டு

துப்பாக்கிச் சூடு பற்றி நீதி விசாரணை நடத்த உ. பி. முதலமைச்சர் மறுப்பு

'நிர்வாகத்தில் ஒழுங்குக் குறைவு ஏற்படும்' எனப் பசப்பல்

இலட்சுமணபுரி, சூலை 31—

இந்திரா காங்கிரசு ஆட்சி நடைபெறும் உத்தரப் பிரதேசத்திலுள்ள அலிகார் பல்கலைக்கழக நிர்வாகத்தைச் சீர்திருத்த மத்திய அரசு பிறப்பித்த சட்டத்தை எதிர்த்து நடைபெற்ற போராட்டத்தின்போது துப்பாக்கிச் சூடு நடைபெற்றது.

கலவரத்தின்போது, வாரணசி -- பெரோசாபாத் ஆகிய இடங்களில் நடைபெற்ற துப்பாக்கிச் சூடுபற்றி நீதி விசாரணை நடத்த வேண்டும் என்று உத்தரப் பிரதேச சட்டமன்றத்தில், எதிர்க் கட்சி உறுப்பினர்கள் வற்புறுத்தினர்.

இந்தக் கோரிக்கையை, உ. பி. முதலமைச்சர் கமலபதி திரிபாதி நிராகரித்தார் ; 'துப்பாக்கிச் சூடுபற்றி நீதி விசாரணை நடத்த முடியாது' என்று கண்டிப்பாக அறிவித்தார் ; இத்தொடர்பில் அவர் கூறியதாவது :--

"நீதி விசாரணை, மாநில அரசின் நிர்வாகத்தில் ஒழுக்கக் குறைவை ஏற்படுத்தும் ; அந்த விசாரணை மூலம் எதிர்மறை விளைவுகளே ஏற்படும்.

மாநில அரசு கடுமையான நடவடிக்கைகளை எடுக்காமல் இருந்திருந்தால், இந்த இரண்டு இடங்களிலும் அமைதி நிலை 48 மணி நேரத்தில் திரும்பி வந்திருக்காது ; மேலும், பல இடங்களில் வகுப்புக் கலவரம் ஏற்பட்டிருக்கும்.

இரகசியப் போலீசார் குறிப்புக்களின்பேரில்தான் அரசாங்கம் கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டிவந்தது."

சோஷலிஸ்டுக் கட்சித் தலைவர் அனந்தராம் ஜெய்ஸ்வால் பேசுகையில், 'போலீசு இரகசிய அறிக்கை, முதலமைச்சர் சொன்ன தற்கு மாறாக இருந்தது' என்று குறிப்பிட்டார்.

இந்தப் பேச்சு முதலமைச்சருக்கும் -- துணை அவைத் தலைவருக்கும் ஆத்திரத்தை ஊட்டியதால், ஜெய்ஸ்வாலை தமது இடத்தில் அமரும்படி துணை அவைத் தலைவர் உத்தரவிட்டார் ; இதனையடுத்து, துணைத் தலைவருக்கும் -- ஜெய்ஸ்வாலுக்கும் கடுமையான வாககுவாதம் ஏற்பட்டது.

ஜனசங்கத் தலைவரின் வேண்டுகோளுக்குப் பிறகு அமைதி நிலை ஏற்பட்டது.

பிறகு முதலமைச்சர் திரிபாதி பேசியதாவது :—

"வாரணசி, பெரோசாபாத் கலவரம்பற்றி ஆய்வு நடத்த வந்த தி. மு. கழகம் -- முஸ்லீம் லீக் குழு ஒரு தவறான தகவலைத் தந்திருக்கிறது.

மாநில ஆயுதப் போலீசுப் படை ஒரு அதிரடிப் படை ; 'தலையில் சுடாமல் காலில் சுட்டால் தண்டிக்கப்படுவார்கள்' என்று அவர்களுக்கு உத்தரவிட்டதாகக் கூறப்படுகிறது ; ஆனால் நான் என்ன சொன்னேன என்றால், 'அடிப்பதற்கென்றே நல்ல பயிற்சியளிக்கப்பட்ட படை அது ; ஒரு நிலைமையைச் சமாளிக்க அந்தப் படை அழைக்கப்பட்டால், பயிற்சி காரணமாகப் பாரபட்சமின்றி தாக்கும்' என்றுதான் கூறினேன்."

விவாதத்தைத் தொடங்கிவைத்த பாரதீய கிராந்தி தளத் தலைவர் சரண் சிங் பேசுகையில், அரசாங்கத்தைக் கடுமையாகத் தாக்கி, 'அரசாங்கமே முழுப் பொறுப்பாகும் ; பெரோசாபாத் -- வாரணசி ஆகிய இரண்டு இடங்களுக்கும் தனித் தனி நீதி விசாரணை வேண்டும்' என்றார்.

"உத்தரப் பிரதேச மாநில அரசின் ஆயுதப் போலீசுப் படை வீடுகளைக் கொள்ளையடித்திருக்கிறது -- வீடுகளுக்குத் தீ வைத்திருக்கிறது" என்றார்.

"இந்த நிகழ்ச்சிபற்றி அனைத்துக் கட்சி விசாரணைக் குழு அமைக்கப்பட வேண்டும்" என்று ஜனசங்கத் தலைவர் ஜெய்ஸ்வால் கோரினார்.

முஜிபுர் ரகிமான்-- பூட்டோ சந்திப்பு?

இலண்டனில் வதந்தி

இலண்டன், சூலை 31—

"தற்போது சிகிச்சைக்காக இலண்டனில் இருக்கும் வங்க தேசத் தலைவர் முஜிபுர் ரகிமானைப் பாகிஸ்தான் அதிபர் பூட்டோ இலண்டனில் சந்தித்துப் பேசவிருக்கிறார்" என்று இங்கு பலத்த வதந்தி பரவியிருக்கிறது.

இது குறித்துக் கருத்தறிவித்த பிரிட்டிஷ் அரசு, இந்த இரு நாட்டுத் தலைவர்களின் சந்திப்புக்கான எவ்வித முயற்சியிலும் பிரிட்டிஷ் அரசு ஈடுபடாது என்றும், ஆனால் தனது நாட்டில் இப்படி ஒரு சந்திப்பு நடைபெற்றால் பிரிட்டன் பெரு மகிழ்ச்சிகொள்ளும் என்றும் கூறியது.

வங்க தேசத்தை அங்கீகரிப்பது வரையில், பூட்டோவைச் சந்திப்பதில்லை என்று முஜிபுர் ரகிமான் ஏற்கனவே தெளிவாக்கியிருந்தார் ; ஆகவே, சந்திப்புக்கான உறுதிமொழி ரகிமானிடமிருந்து கிடைத்தாலன்றி பூட்டோ இலண்டன் செல்லமாட்டார் என்று நம்பப்படுகிறது.

ஆகஸ்டு முதல் வாரத்தில் பூட்டோ இலண்டன் செல்வார் என்று பல பத்திரிகைச் செய்திகள் தெரிவித்தன.

"பாகிஸ்தான் தேசீயச் சட்டமன்றம் வங்கதேச அங்கீகாரம் பற்றி விவாதித்து முடிவெடுக்கும்வரையில் பூட்டோ -- முஜிபுர் ரகிமான் சந்திப்பு நடைபெறாது" என்று, பாகிஸ்தான் அரசுத் தரப்பிலிருந்து கூறப்பட்டிருக்கிறது.

"ரகிமான் அறுவைச் சிகிச்சை செய்து கொண்டிருப்பதால், இப்போதைக்கு அப்படி ஒரு சந்திப்பு நடைபெற வாய்ப்பில்லை" என்பதை நோக்கர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள்.

முஜிபுர்ரகிமானுக்கு அறுவைச் சிகிச்சை

இலண்டன், சூலை 31—

வங்க தேசத் தலைமையமைச்சர் முஜிபுர் ரகிமானுக்கு நேற்று இங்கு அறுவைச் சிகிச்சை நடைபெற்றது.

"அறுவைச் சிகிச்சைக்குப்பின் முஜிபுர் ரகிமான் உடல்நிலை திருப்திகரமாக இருக்கிறது" என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

முஜிபுர் ரகிமானுக்கு முதல்வர் கலைஞர் தந்தி

சென்னை, சூலை 31—

வங்க தேசத் தலைமையமைச்சர் முஜிபுர் ரகிமானுக்குத் தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தந்தி ஒன்று அனுப்பியிருக்கிறார் ; அதில் அவர் கூறியிருப்பதாவது :—

"தாங்கள் விரைவில் குணமடைந்து நலமுடன் தாயகம் திரும்ப வாழ்த்துகிறேன்."

கூடல்மா நகரில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வர் கலைஞர் ஆகியோரின் உருவப் படங்கள் இடம்பெறும்.

இந்த உலக உருண்டை நான்கு கரங்களால் தாங்கப்படுவது போல அமைக்கப்படும் ; இந்த வரவேற்பு வளைவுப் பணிகள் -- பி.எஸ் மணியம் எம்.எல்.ஏ. மேற்பார்வையில் நடைபெற்று வருகிறது.

மாநாட்டையொட்டி, ஊர்வலம் செல்லும் பாதைகளில் ஏறத்தாழ 300 வரவேற்பு வளைவுகள் -- வெவ்வேறு கோணங்களில் புதுமையாகவும், கண்டோர் உள்ளம் மகிழத்தக்க வகையிலும் அமைக்கப்பட்டு வருகின்றன.

மாநாட்டுப் பந்தலிலேயே முதல் உதவி மருத்துவமனை -- அஞ்சல் அலுவலகம் -- தீயணைப்புப் படை ஆகியவை இருக்கும்.

சர்க்கரை விலை

அமைச்சர் அறிவிப்பு

சென்னை, சூலை 31—

'ரேஷன்' கார்டு வைத்திருப்பவர்களுக்கு வழங்கப்படும் லெவி சர்க்கரையின் விலை ரூ 2 லிருந்து ரூ. 1 85 ஆகக் குறைக்கப்படும் ; ஆகஸ்டு 1-ம் நாளிலிருந்து இந்தக் குறைந்த விலை நடைமுறைக்கு வரும் ; மாநிலம் முழுவதற்கும் இது பொருந்தும்.

"மத்திய அரசு ஒதுக்கும் லெவி சர்க்கரையின் மொத்த விற்பனை விலை குறைக்கப்பட்டதைத் தொடர்ந்து சில்லறை விற்பனை விலையும் குறைக்கப்பட்டிருக்கிறது"

என்று உணவு அமைச்சர் ப. உ. சண்முகம் அவர்கள் அறிவித்தார்.

கோதுமை விலை குறையும்

தொடர்ந்து அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது :—

"சென்னை நகரில் பஞ்சாப் கோதுமையின் விலை ஆகஸ்டு 1-ம் நாளிலிருந்து கிலோ 9 காசுகளிலிருந்து 86 காசுகளாகக் குறைக்கப்படும் ; கோதுமையை நேரடியாக வியாபாரிகளுக்கு வினியோகிக்க உணவுக் கார்ப்பரேஷன் ஒப்புக்கொண்டிருப்பதால் இது இயலக்கூடியதாயிற்று ; இதனால், மாநில அரசுக்கு ஏற்பட்டுவந்த செலவு தவிர்க்கப்படுகிறது.

எம். எஸ். வெங்கடாசலத்துக்கு அறுவைச் சிகிச்சை

திருச்சி மாவட்ட தி. மு. க. செயலாளர் எம். எஸ். வெங்கடாசலத்திற்கு தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 24—7—72 அன்று அறுவைச் சிகிச்சை நடந்தது ; வயிற்றுவலி காரணமாக சிகிச்சை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

டாக்டர் எஸ். வேணுகோபால் தலைமையில் அறுவைச் சிகிச்சை நடைபெற்றது ; தற்போது குணமடைந்து வருகிறார்.

அவர் மருத்துவமனையில் இன்னும் இரண்டு வார காலத்திற்கு இருக்கவேண்டும் என்று டாக்டர்கள் கூறியிருக்கின்றனர்.

இளமுருகுபொற்செல்வி உடல்நிலை

முதல்வர் கலைஞர் கண்டு விசாரித்தார்

சென்னை, சூலை 31—

சென்னை ஸ்டான்லி மருத்துவமனையில் அறுவைச் சிகிச்சை செய்து கொண்டுள்ள 'அஞ்சுகம்' ஆசிரியர் திரு. மீ. சு. இளமுருகு பொற்செல்வி அவர்களை முதல்வர் கலைஞர் அவர்கள் தம் துணைவியாருடன் வந்து பார்த்து உடல் நலம் விசாரித்துச் சென்றார்.

அமைச்சர்கள் என். வி. நடராசன், க. இராராம், பள்ளிக் கல்வி இயக்குநர் சி. சிட்டிபாபு ஆகியோரும் அவரைச் சந்தித்து உடல்நலம் விசாரித்தனர்.

அரசுப் பணிமனைகளில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தீர்மானத்திற்கு எதிராக வாக்கு அளித்தனர்.

தீர்மானத்திற்கு ஆதரவாக எதிர்க் கட்சி உறுப்பினர்கள் 9-பேர் வாக்கு அளித்தனர்.

தீர்மானத்தைக் கொண்டுவந்த உறுப்பினர் சந்திரசேகர் (இந்திரா கட்சி) கட்சிக் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டு எதிர்த்து வாக்கு அளித்தார்.

"சாதி முறையை ஒழித்தே ஆக வேண்டும்" என்று சந்திரசேகர் வற்புறுத்தினார்.

"சாதி முறைபற்றி அரசியல் சட்டம் மௌனமாக இருக்கும் போது, இத்தீர்மானத்துக்குச் சட்டபூர்வமான பலம் கிடைக்காது -- அரசியல் சட்டம் திருத்தப்படும்வரையில் இதுபோன்ற தீர்மானங்கள் செலலுபடியாகாது"

என்று அமைச்சர் பசவலிங்கப்பா விளக்கிய பிறகு, தீர்மானத்தைத் திரும்பப்பெற உறுப்பினர் முன்வந்தார் ; ஆனால், வாக்கெடுக்குமாறு எதிர்க் கட்சித் தலைவர்கள் வற்புறுத்தினர்.

"சாதியை ஒழிப்பதற்காக அரசியல் சட்டத்தைத் திருத்தத் தலைமையமைச்சர் நடவடிக்கை எடுக்கவேண்டும்" என்று அமைச்சர் பசவலிங்கப்பா குறிப்பிட்டார்.

புரட்சிநடிகருக்குப் பாராட்டு

தென்னிந்திய நடிகர் சங்கம் நடத்திய விழா

சென்னை, சூலை 30—

தென்னிந்திய நடிகர் சங்கத்தின் சார்பில், 'அனைத்திந்தியாவின் சிறந்த நடிகர் விருதுபெற்ற 'பாரத்' -- புரட்சி நடிகருக்குப் பாராட்டு விழாத நேற்று சங்கத்தின் அரங்கில் -- சங்கத்தின் தலைவர் சிவாஜி கணேசன் தலைமையில் சிறப்புற நடைபெற்றது.

நடிகர் சங்க உறுப்பினர்களும் -- கலையுலகப் பிரமுகர்களும் -- பொதுமக்களும ஏராளமாக வந்திருந்து விழாவைச் சிறப்பித்தனர்.

விழாவுக்கு வருகை தந்த புரட்சி நடிகரை நுழைவாயிலிலிருந்து சிவாஜி--கையைப் பற்றியவாறு அழைத்துவந்தார்.

விழாவுக்கு வருகை தந்த அனைவரையும வரவேற்று ஏ. பி. நாகராசன் உரையாற்றினார்.

தமது தலைமையுரையில் சிவாஜி-கணேசன குறிப்பிட்டதாவது :—

"மக்கள் திலகம் அவர்கள், 'பாரத்' விருதுபெற்றது -- நடிகர் உலகத்துககே ஏற்பட்ட ஒரு பெருமையாகும்.

அரசியலில் நாங்கள் வேறு வேறாக இருந்தாலும், நடிகர் உலகைப் பொறுத்தமட்டில எங்களுக்குள் எந்தக கருத்து வேறுபாடும் கிடையாது -- இருக்கவும் முடியாது -- இருப்பதற்கும் வாய்ப்பில்லை.

மற்றவர்கள் வேண்டுமென்றால் குழப்பிக்கொள்ளலாம் ; ஆனால் எனக்கு இதில இரட்டிப்பு மகிழ்ச்சி உண்டாகிறது.

சேரன் செங்குட்டுவன் இமயத்துக்குச் சென்று கண்ணகிக்குச் சிலை செய்யக் கல் கொண்டுவந்த புகழைப்போல் -- இந்து விருது பெற்று வந்திருக்கும் மக்கள் திலகம் அவர்கள், தமிழகத்து மக்கள் அனைவரும் பூரிப்பாக -- ஒன்றாக -- மனமார வாழ்த்துவதில் பெருமைப்படுகிறோம்."

பொன்னாடை -- வாழ்த்திதழ்

சிவாஜி-கணேசனின் தலைமையுரைக்குப்பின் சங்கத்தின் சார்பில் புரட்சி நடிகருக்கு வாழ்த்திதழ் வாசித்தளிககப்பட்டது.

மேஜர் சுந்தரராஜன் வாழ்ததிதழ் வாசிததளிக்க -- சிவாஜி கணேசன் பொன்னாடை அணிவித்ததும் புரட்சி நடிகா, நடிகர் சங்கத் தலைவரை ஆரத் தழுவிக்கொண்டார்.

புரட்சி நடிகரைப் பாராட்டி இசை நாடகச் சங்கச் செயலாளர் எஸ். டி. சுநதரம், நுணுக்கக் கலைஞர்கள் சாரபில் நிமாய் கோஷ் நுணுக்க கலைஞர்கள் சங்கத்தின சாரபில் கிருஷ்ணசாமி, மூவி மேக்கர்ஸ் கவுனசில் சார்பில ஸ்ரீதர், திருமதி வஜய குமாரி, எம. கே. இராதா, விஸ்வேஸ்வர ராவ், வடஇந்திய நடிகர் ராஜ் குமார், சரோஜாதேவி, மலையாளப் பட உலகின் சார்பில் தாமஸ், ஜெயலலிதா, கன்னட நடிகர் ராஜ் குமார், தெலுங்கு நடிகர் என். டி. ராமராவ், ஜெமினி கணேசன், இலட்சிய நடிகர் எஸ். எஸ். இராஜேந்திரன் எம்.பி., தென்னிந்தியத் திரைப்பட வர்த்தகசபை தலைவர் நாகி ரெட்டி ஆகியோர் புரட்சி நடிகரைப் பாராட்டிப் பேசினார்கள்.

நடிகர் சங்கத்தின் துணைத் தலைவர் ஆர். எம். வீரப்பன், விழாவிற்கு உறுதுணை புரிந்தவர்களுககு நன்றி கூறினார்.

எம்.ஜி.ஆர். நன்றியுரை

வரவேற்பு -- பாராட்டுக்கு நன்றி தெரிவித்துப் புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"நடிகர்சங்கம் எனக்கு அளிக்கும் பாராட்டு விழாவில், 25 வயது இளைஞனைப் போன்ற உணர்வைப் பெறுகிறேன்.

'கலையுலகின் மூலம் எங்களுக்கு ஏற்பட்டுள்ள புகழ்-- அனுபவங்களெல்லாம் இந்தியத் துணைக் கண்டத்துக்குப் பயன்படாதா என்றுதான் நாங்கள் நினைக்கிறோம்."

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு [illegible]